**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதியார் பணியாற்றிய இரு பத்திரிகைகளின் பெயர்களைச் சுட்டுக.
2. பாரதி தெய்வம் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?
3. சமுதாயச் சீர்திருத்தத்திற்குத் தடையாய் இருப்பவை எவை?
4. ஆங்கில கல்வியின் விளைவால் நேர்ந்த அவலம் யாது?
5. கல்வியை எந்த மொழியில் கொடுக்க வேண்டும் என்று பாரதியார் குறிப்பிடுகிறார்?
6. பாரதியிடம் பெண்ணுரிமை சிந்தனைகள் எழக் காரணமாக இருந்தவர் யார்?
7. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டறிந்தவர் யார்?
8. கவிதையை முழுமையாக அறிந்துகொள்ள உதவும் இரு நிலைகள் எவை?
9. பாரதிதாசனைத் திரைப்பாடல் எழுத முதலில் அழைத்தவர் யார்?
10. அகமண முறை என்பதன் பொருள் என்ன?
11. தமிழ் வளர்ச்சிக்குத் தடையாகப் பாரதிதாசன் எதை உணர்த்துகிறார்?
12. பொறுப்பில்லாத தலைவி படுக்கையிலிருந்து எழுந்ததை எவ்வாறு பாரதிதாசன் பாடியுள்ளார்?

13. திறல் நாட்டை ஆண்ட மன்னன் யார்? அவனுடைய தம்பியும் மகனும் யாவர்?
14. களை எடுக்கும் பெண்ணின் முகத்தைப் பாவேந்தர் எவ்வாறு உவமைப்படுத்தியுள்ளார்?
15. உயிரைவிட எதைப் பெரிது என்று பாரதிதாசன் பாடியுள்ளார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தேசியக்கொடியின் சிறப்புகள் யாவை?
2. குயிலின் முற்பிறவியல் நிகழ்ந்தது யாது?
3. தமிழ்நாட்டின் நீர்வளத்திற்குக் காரணம் என்ன?
4. உலகளாவிய நோக்கு என்றால் என்ன?
5. புதுவை அரசு கொண்டிருந்த முற்போக்குத் திட்டங்கள் யாவை?
6. பெண்ணின் அதிகாலைச் சுறுசுறுப்புப் பற்றி நீவிர் அறிவது என்ன?
7. தமிழர்களின் பண்பு வளமாகப் பாரதிதாசன் எதைக் கூறுகிறார்?
8. கிளியைப் பற்றிக் கூறிய பாரதிதாசன், அதன்மூலம் வெளிப்படுத்தும் கருத்து யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் இலக்கியப் படைப்புகளும் சமூகச் சீர்திருத்தமும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதியாரும் இந்திய விடுதலை இயக்கமும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

2. (அ) பாரதியார் தேசியத் தலைவர்களைப் பற்றி பாடியதைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மூடநம்பிக்கைக்கு எதிராகப் பாட்டுக்குரல் கொடுத்தவர் பாரதிதாசன் என்பதை நிறுவுக.

3. (அ) பாரதிதாசனும் பெண் விடுதலையும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் தமிழ் உணர்வு குறித்து கட்டுரை எழுதுக.

***